பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 19 திங்கட்கிழமை 06.11.2023 கதிர் 359

# சீனா இலங்கைக்கு உதவியது பற்றி இந்தியா, அமெ. ஏன் மகிழவில்லை?

## தனக்கு காரணம் தெரியவில்லை என்கிறார் சீன தூதுவர்

நாங்கள் பல இக்கட்டான சூழ லில் இலங்கை மக்களுக்கு உதவியுள் ளோம். அது குறித்து இந்தியாவும், அமெரிக்காவும் ஏன் மகிழ்ச்சி அடைய வில்லை என்பது ஏன் என்று எனக்குத் தெரியவில்லைஎன்றுஇலங்கைக்கான சீனத்தூதுவர் குய் சென் ஹாங் தெரிவித்தார்.

அவர் தலைமையிலான குழுவினர் நேற்றைதினம் வடக்கிற்கு வருகை தந்திருந்தனர். முதலில் வவுனியாவை வந்டைந்த அக்குழுவினர் மாவட்ட மேலதிகச் செயலர் திரேஷ்குமாரை நேரில் சந்தித்ததோடு நிவாரண உத விப்பொதிகளையும் கையளித்தனர்.

சீன, இலங்கை பௌத்த நட்புறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா, வவுனியா தெற்கு உட்பட நான்கு பிரதேச செயலா ளர் பிரிவுகளில் உள்ள தெரிவு செய்யப் பட்ட 500 பேருக்கு தலா 7500 ரூபாய் பெறுமதியான உலர் உணவு ☞ 2

# இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடந்தது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்துவது குறித்து ஆராய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுதான் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது என்பதால் அது பற்றியே கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது. கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமை தாங்கினார். பதில் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பொ-ருளாளர் கனகசபாபதி ஆகியோரும் உடனிருந்தனர்.

கலந்துரையாடல்களின் பின்னர் அடுத்த வருடம் ஜனவரி 21 திருகோணமலையில் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டுவது என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. வழக்கமாக கட்சியின் தேசிய மாநாடான பொதுக்குழுக் கூட்டம் மூன்று நாட்களைக் கொண்டது. முதல் நாளில் மத்திய செயற்குழுக் கூட்டம் நடத்தப்படும். அந்தக் கூட்டத்தில் கட்சியின் அடுத்த தலைவர் உட்பட நிர்வாகிகள் யார் என்பது முடிவு செய்யப்படும். மறுநாள் பொதுக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு அதில் புதிய கட்சித் தலைவர் உட்பட நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள். மூன்றாவது நாள் கட்சியின் பேராளர்கள் கூட்டம் நடத்தப்படும். ☞ 2

# காஸாவில் சிக்கிக் கொண்டிருந்த 11 இலங்கையரும் நாடு திரும்பினர்

இஸ்ரேல்- பலஸ்தீன மோதல்கள் காரணமாக, காஸா பகுதியில் இருந்து எகிப்துவந்தடைந்த11இலங்கையர்களும் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

2 குடும்பங்களைச் சேர்ந்த 2 பெண்களும் 9 குழந்தைகளும் நாடு திரும்பியவர்களில் உள்ளடங்குகின் றனர் என்று பலஸ்தீனத்திலுள்ள இலங்கை பிரதிநிதி அலுவலக பிரதானி பேர்னாட் குரே தெரிவித்தார்.

காஸாவில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் கடந்த 3ஆம் திகதி எகிப்துக்கு வந்தடைந்தனர் என்று பலஸ்தீனில் உள்ள இலங்கை பிரதிநிதித்துவ அலுவலகம் தெரிவித் துள்ளது. ☞ 2

# ஆட்சிக்கான மக்கள் ஆதரவு மேலும் கடுமையாகச் சரிவு

2023 ஜூன் மாதத்தில் 21 சதவீதமாக இருந்த இந்த ஆட்சி மீதான மக்கள் அங்கீகாரத்தின் மதிப்பீடு 2023 ஒக்டோபரில் 9 சதவீதமாக ஆககுறைந்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச்சின் சமீபத்திய ஆய்வு சுற்றின் 'தேசத்தின் மன நிலை' என்ற கருத்துக் கணிப்பு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களாவன,

2023 ஜூன் மாதத்தில் 12 சதவீதமாக இருந்த நாட்டின் நிலை குறித்த திருப்தி சரிபாதியாக அதாவது 6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பொருளாதாரம் மீதான நம்பிக்கை மதிப்பெண் ஜூன் மாதத்தில் வெகுவாகக் குறைந்துள்ளது.

தற்போதைய ஆட்சி செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல் லது மறுக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு, 9 சதவீதமானோர் தாங்கள் அதை அங்கீகரிப்பதாகக் கூறியுள்ளனர் (நூ 1.93சதவீதமான பிழை விளிம்புடன்). மேலும், 7 சதவீதமானோர் தங்களுக்கு அதை பற்றிய எந்தவித கருத்தும் இல்லை என்று கூறியுள்ளனர்.

இந்த ஆட்சி மீதான அங்கீகாரம் தொடர்பான தற்போதைய மதிப்பீடு 2022 ஜனவரி, ஒக்டோபர் மற்றும் 2023 பெப்ரவரியில் இருந்த 10 சதவீதத்துக்கு அருகிலுள்ள மதிப்பை பிரதிபலிக்கிறது.

பொதுவாக, இலங்கையில் நடக்கும் விடயங் கள் குறித்து நீங்கள் திருப்தியடைகிறீர்களா அல்லது அதிருப்தியடைகிறீர்களா?' என்ற கேள்விக்கு, 6 சதவீதம் பேர் மட்டுமே திருப்தி யடைவதாகத் தெரிவித்துள்ளனர் (நூ 1.66% பிழை விளிம்புடன்). எனினும் மதிப்பீடு 2023 பெப்ரவரியில் காணப்பட்டதை போலவே 4 ☞ 8

# மேலிடத்து உத்தரவிலேயே பல்கலை மாணவர்கள் கைது

## கஜேந்திரகுமார் எம்.பி கண்டனம்

மட்டக்களப்பு பண்ணை யாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் போராட்டத்தினை முன்னெடுத்த பல்கலைக்கழக மாணவர்கள் அதனை நிறைவு செய்து செல்லும்போதே மேலிடத்து உத்தரவில் கைது செய்யப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவரும், ☞ 8

### மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்

# போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக பல்கலை மாணவர்களும் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மயிலத் தமடு மாதவனைப் பண் ணையாளர்களின் மேய்ச்சல் தரை போராட் டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக வடக்கு, கிழக்க பல்கலைக்கழக மாண வர்கள் நேற்றையதினம் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

முறக்கொட்டாஞ் சேனை முத்துமாரி ☞ 2

# அடக்குமுறைகளிற்கு எதிராக தமிழரசுக் கட்சி ஆர்பாட்டம்

## வவுனியாவில் நேற்று நடந்தது



வடகிழக்கில் தமிழ் மக்களின் மீது முன்னெ டுக்கப்பட்டுவரும் அடக்கு முறைகளிற்கு எதிராக தமிழ் அரசுக் கட்சி யினரால் நேற்று ☞ 2

# ராஜபக்ஷக்களின் முகாமை சேர்ந்தவன் அல்லன் நான்

## திலித் ஜெயவீர வாக்குமூலம்

நான் ராஜபக்ஷக் களின் முகாமைச் சேர்ந்தவன் அல்லன். அவர்களிடத்தில் நான் ஐந்து சதத்தினைக்கூட பெற்றுக்கொண்டது கிடையாது என்று மவ் பிம மக்கள் கட்சியின் தலைவர் திலித் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

தெரன ஊடக நிறுவ னங்களின் தலைவரு மான அவர், காலியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது உரையாற்றுகை யிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். கோட்டாபயவைப் பதவிக்குக் கொண்டு வருவதற்கு மிக முக்கிய ஆதரவை அவரது ஊடக நிறுவனங்கள் வழங்கியிருந்தன.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

நான் ராஜபக்ஷக் களின் முகாமைச் ☞ 8

### ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# தங்கம் வென்ற மாணவிக்கு ஜனாதிபதி நேரில் பாராட்டு

ஆசியவிளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக் கம் வென்ற மாணவி தருஷிகருணாரத்னவை ஜனாதிபதி சந்தித்து நேரில் வாழ்த்துத் தெரி வித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆசியவிளையாட்டுப் போட்டிகளில் பெண்க ளுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்குத் தங்கப் பதக்கத்தை வென்று தந்த மாணவி தருஷி கருணாரத்னவைகண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்றுஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப் பட்டுள்ள தூதுவர்க ளுக்குநற்சான்றிதழ்கள் வழங்கும்நிகழ்வுகண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போது மாணவி தருஷி ☞ 2

# பொலிஸாருக்கு பாதாளக் குழுக்கள் மிரட்டல் வெட்கப்பட வேண்டியது என்கிறார் அமைச்சர்

பாதாள குழுவினர் பொலிஸாருக்கு அச்சு றுத்தல் விடுப்பதையிட்டு ஒட்டுமொத்த பொலிஸ் அதிகாரிகளும் வெட்கப்பட வேண்டுமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

தென்மாகாணத்தில் பொலிஸ் உயர் அதிகாரி களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் நிலையங் களின் வளங்களை விரிவுப்படுத்துவதற்கு இயலுமான நடவடிக் கைகளை முன்னெடுத் துள்ளேன். பல சலுகை களைபெற்றுக்கொடுத்துள் ளேன். ஆனால் எதிர்பார்க் கப்பட்ட இலக்கை அடை யவில்லை. பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஏதேனும் சம்பவம் இடம்பெற்றால் அதற்கு உரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொறுப்புக் கூற வேண்டும்.

பொலிஸாரின் செயற்பாடுகள் இனி ☞ 2

# நீதிமன்றுக்குக் கட்டுப்படுவோம் பொலிஸாரின் கட்டளைக்கல்ல

## முன்னணி பேச்சாளர் சுகாஸ் தெரிவிப்பு

நீதிமன்றக் கட்ட ளையை மதிக்கத் தயார் ஆனால் பொலிஸாரின் சட்டவிரோத உத்தர வுகளுக்குக் கட்டுப்பட முடியாது. போராட்டம் தொடருமென தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய கட்டளை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மல்லாகம் நீதிவான் நீதிமன் றதினால் நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இந்தத் தடவை கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை இரண்டு கட்டங்களாகப் பிரித்து நடத்துவது என்றுதீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஜனவரி 21 கட்சி நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் குழுக் கூட்டமும், ஜனவரி 27 கட்சியின் அரசியல் கொள்கைகள் தீர்மானங்களை பிரகடனங்களாக வெளிப்படுத்தும் பொதுக் கூட்டமும் நடத்தப்படும் என்று நேற்றைய செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 21 பொதுக் குழுக் கூட்டத்திற்கு முதல்நாள்ஜனவரி20 செயற்குழு திருகோணமலையில் கூடி கட்சியின் அடுத்த தலைவர் உள்ளிட்ட புதிய நிர்வாகிகள் யார் என்பதை முடிவுசெய்வது என்றும் இணங்கப்பட்டது. தலைவர் உட்பட கட்சியின் நிர்வாகப் பதவிகள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படாமல் பலர் போட்டியிடும் நிலை காணப்பட்டால், மறுநாள் பொதுக் குழுக் கூட்டத்தில் வைத்தே நேரடியாகப் போட்டி மூலம் - ஜனநாயக வழிமுறையில் - புதிய தலைவர்உட்படகட்சிநிர்வாகிகளைத் தெரிவுசெய்வதுஎன்கிறஇணக்கமும் எட்டப்பட்டுள்ளது.

அனேகமாக இந்தத் தடவை முதல் நாள் செயற்குழுவில் கட்சி தலைமைக்கு ஏகமனதான தெரிவு இருப்பதற்கு வாய்ப்பக்கள் இல்லை என்றே கட்சிக்குள் பேசிக்கொள்கிறார்கள். தலைமைப் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன் மற்றும் எஸ்.சிறீதரன் ஆகியோர் நிச்சயம் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனாலேயே கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை இரண்டு கட்டங்களாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதை உணர முடிகின்றது.

வழக்கமாக பொதுக் குழுக் கூட்டத்திற்கு முதல்நாளில் நடக்கும் செயற்குழுவில் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுவிடுவார் என்பதால்பொதுக்குழுக்கூட்டத்திற்கு வரும்போதேஅவர்தனதுகொள்கை உரை உட்பட தீர்மானங்கள் அனைத்தையும் புதிய தலைவர் தயார்ப்படுத்தி எடுத்துவருவது சாத்தியமானதாக இருக்கும். இந்த முறை அப்படியின்றி பொதுக் குழுக் கூட்டத்திலேயே புதிய தலைவர் தெரிவு செய்யப்படும் நிலை ஏற்பட்டால் அதன் பின்னரே அவர் தனது தலைமையுரை உட்படத் தீர்மானங்களையும் தயாரிக்க வேண்டியவராக இருப்பார். அதற்காகவே பொதுக் குழுக் கூட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு நாளில் நிர்வாகத் தெரிவு உள்ளிட்ட கட்சி விடயங்கள் குறித்து ஆராய்வது என்றும் மற்றொருநாள் கட்சியின் அரசியல் கொள்கைகள், தீர்மானங்கள் குறித்து முடிவு செய்வது என்றும் முடிவு செய்திருக்கிறார்கள் என்று உணர முடிகின்றது.

கட்சியின் பொதுக் குழுவை டிசெம்பரில் கூட்டுவது என்றுதான் முன்னர்முடிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும் நேற்றைய கூட்டத்தில் அது ஜனவரி மாதத்திற்குத் தள்ளிப்போயுள்ளது. ஏற்கனவே போதுக் குழுக் கூட்டம் 4 வருடங்களாகநாளைநாளைநாளை என்று கடத்தப்பட்டு வந்திருக்கிறது. அதனால் ஜனவரி மாதமாவது கூட்டம் நடக்குமா என்கிற கேள்வி எழுவது நியாயமானதே.

ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லி அவ்வாறு நடக்கலாம் என்பதால்தான் இன்னும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டு ஜனவரி மூன்றாம் வாரத்திற்கு பொதுக் குழுக் கூட்டத்தைத் தள்ளி வைத்திருக்கின்றோம். பொதுக்குழுக் கூட்டத்திற்கு முன்னதாக கட்சியின் மூலக்கிளைகளின்புதியநிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கவேண்டும். அனேகமாக மற்றைய இடங்களில் அவை முடிந்துவிட்டன. யாழ்ப்பாணத்தில்தான் 4 கிளைகளில் 2 கிளைகளுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு நடத்தப் படவேண்டியிருக்கிறது. இதனை இந்த மாதத்திற்குள் முடிப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். அனைத்துப் பணிகளையும் டிசெம்பருக்குகள் முடித்து மேலும் சாக்குப் போக்குச் சொல்லாத வகையில் ஜனவரியில் எப்படியும் பொதுக் குழுவைக் கூட்டுவதுதான் நோக்கமே என்றார் கட்சிப் பிரமுகர் ஒருவர்.

பார்க்கலாம் ஜனவரியிலாவது பொதுக்குழுக் கூட்டம் நடக்கிறதா என்று!

நேற்றைய கூட்டத்தில் கட்சி விடயங்கள் தவிர பிற அரசி யல் விடயங்கள் எவையும் பேசப்பட வில்லை. பொதுக் குழுக் கூட்டம் குறித்துஆராயப்பட்டதுடன்கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனைப் பதவி விலகவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பிலும் கேள்வி எழுப்பப் பட்டிருந்தது. அதனையும் இங்கே சொல்லப்போனால் இந்தப் பத்தி இன்னும் நீண்டுவிடும் என்பதால் அதுபற்றிய விவரங்களை உங்களுக்கு நாளை தருகின்றேன் வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதவிப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது உரையாற்றி சீன தூதுவர், இந்த நிகழ்வுக்களில் பங்கேற்றமைக்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இங்கே தேவையுள்ளவர்களுக்கு மட்டுமே நாம் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றோம்.

உங்களுக்குத் தெரிவும், சீனா, இலங்கை இருதரப்பு உறவு என்பது வரலாற்றுக்காலம் முதல் காணப்படுகிறது. அவ்வாறான நிலையில் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு சீனாதான் முதலில் உடன்படிக் கைகளை முன்னெடுத்தது.

சில சந்தர்ப்பங்களில் உடன்பாடுகளைஎட்டுவதில்கூடபிரச்சினைகள் காணப்பட்டது. சீன அரசு வடக்கு மாகாணத்திற்கு 150 மில்லியன் ரூபாய் நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் மீன்பிடிக்கான வலைகளைப் பெற்றுக்கொள்வற்கும் உதவிகளை வழங்கியுள்ளது. மீதிப்பணத்தில் வடமாகாணத்தின் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ளது என்றார்.

அதனைத்தொடர்ந்துசீனத்தூதுவர் குழுவானது முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், கிளநொச்சி மாடத்திற்கும் சென்று உலர் உணவுப்பொருட்களைவழங்கினர். அதன்பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சீனத்தூதுவர் பதிலளித்தார்.

கேள்வி:- நிவாரணப்பொதிகளை வழங்கும் செயற்றிட்டம் வடக்கு மாகாணத்திற்கு மட்டுமானதா?

பதில்:- பொருளாதார நெருக் கடிகளுக்குள்ளாகியுள்ள ஒட்டு மொத்த இலங்கையர்களுக்கும் நிவாரணங்களை வழங்கவுள்ளோம். தற்போது வடக்கு மாகாணத்துக்கு வழங்குகின்றோம்.

கேள்வி:- சீனாவினுடைய வருகையை இந்தியாவும், அமெரிக்காவும் விரும்பாத நிலைமையைஎவ்வாறுபார்க்கின்றீர்கள்?

பதில்:- எனக்கு குழப்பமாக உள்ளது. நாங்கள் பல இக்கட்டான சூழலில் இலங்கை மக்களுக்கு உதவியுள்ளோம். அது குறித்து இந்தியாவும், அமெரிக்காவும் ஏன் மகிழ்ச்சி அடையவில்லை என்பது ஏன்என்றுஎனக்குத்தெரியவில்லை நீங்களேகாரணங்களைகூறுங்கள் என்றார்.

## காஸாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஃபா நுழைவாயில் ஊடாக எகிப்துக்கு வந்த அவர்கள், ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்று அந்த அலுவலகத்தின் தலைவர் பென்னட் குரே தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்கள் காரணமாக காஸா பகுதியில் இடம்பெயர்ந்துள்ள இலங்கையைச் சேர்ந்த 17 பேரில் 15 பேர் ரஃபா எல்லை ஊடாக வரவிருந்த நிலையில், அவர்களில் நால்வர் அப்பகுதியில் நிலவும் பாதுகாப்பின்மை காரணமாக அவர்கள் தங்கியிருந்த இடத்தை விட்டு வெளியேற முடிந்திருக்கவில்லை.

## பொலிஸாருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலனாய்வு பிரிவுகள் ஊடாகக் கண்காணிக்கப்படும். பாதாள குழுவினர் பொலிஸாருக்கு தொலைபேசியில் அழைத்து அச்சுறுத்தல் விடுக்கிறார்கள். இந்த நிலைக்கு பொலிஸ் சேவை தள்ளப்பட்டுள்ளதற்கு ஒட்டுமொத்த பொலிஸாரும்வெட்கப்படவேண்டும்.

பாதாள குழு மற்றும் போதைப் பொருள் ஒழிப்புக்கு எதிராக நான் கடுமையாகசெயற்படுவதால்பாதாள குழுவினர் என்னை அமைச்சு பதவியில் இருந்து நீக்குவதற்கு முயற்சிகளைமேற்கொண்டுள்ளனர். பாதாள குழுவினருடன் ஒருசில பொலிஸ் அதிகாரிகள் நெருங்கிய தொடர்பில் உள்ளார்கள்.

செய்யும் தொழிலின் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ள அவ்வாறான செயற்பாடுகளை அவர்கள் இனி தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிறந்த முறையில் செயற்பட முடியாத பொலிஸார் தாராளமாக பதவி விலகலாம்.

நாட்டு மக்கள் பொலிஸ் சேவையை விமர்சிக்காமல் நம்பிக்கை கொள்ளும் நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். பொலிஸாரின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைவரும் பொறுப்புடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## நீதிமன்றுக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணிகாண்டீபன், சட்டத்தரணிசுகாஷ், ஆகியோருக்கு எதிராக ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கட்டளையிலே நேற்று (05) மற்றும் இன்று (06) ஆகிய திகதிகளில் திஸ்ஸ மகா விகாரைக்கு அண்மையில் சொத்துக்களுக்கு அல்லது ஆட்களுக்கோ எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படக்கூடாது என்ற கரிசினையில் பின்வரும் கட்டளை மன்றினால் கட்டளையாக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் திஸ்ஸ விகாரையில் நடைபெறவிருக்கும் கஜினமகா உற்சவத்திற்கு தடைகளோ குழப்பங்களோ ஏற்படுத்தக்கூடாது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசமைப்பின் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும்வகையில்அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துக்களுக்கோ ஆட்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலோ செயல்படக்கூடாது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

''நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பதற்கு முன்பாகவே இந்த விடயங்களை அனுசரித்துத்தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் நீதிமன்றத்தினுடைய கட்டளையை மதிக்க தயார், ஆனால் இங்கே வந்திருக்கின்ற பொலிஸார் நீதிமன்றத்தின் கட்டளைக்கு மேலதிகமாக கோஷங்களை எழுப்பக்கூடாது என்றும் நாங்கள் எழுப்புகின்ற கோஷங்கள் சிங்கள மக்களுக்கும் சிங்கள பக்தர்களுக்கும் மன உளைச்சல்களைஏற்படுத்தக்கூடாது என்றும் புதிதாக சில சட்ட விதிகளை ஏற்படுத்த பார்க்கின்றார்கள். இவற்றுக்கு நாங்கள் அடிபணிய போவது கிடையாது.

நீதிமன்றத்தின் கட்டளையை நாங்கள் மதிக்கத் தயார். ஆனால் பொலிசாருடைய சட்டவிரோதமான கட்டளைகளை நாங்கள் மதிக்க தயார் இல்லை. ஏனென்றால் இங்கு மன உளைச்சல் ஏற்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கும் காணி உரிமையாளர்களுக்கும்தான். ஏனென்றால் எங்களுடைய மக்களுக்கு சொந்தமான, தமிழர்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து தான் சட்ட விரோத விகாரை கட்டப்பட்டு இருக்கின்றது.

இந்த விகாரையில் கொண்டாட்டங்கள் நடக்கின்றபடியால் எங்களுடைய மக்களுக்கு தான் மன உளைச்சலே தவிர சிங்கள மக்களுக்கு அல்ல. எங்களுடைய காணியை பிடித்து விட்டு நீங்கள் வந்து கொண்டாடும்போது நாங்கள் கோஷம் எழுப்பினால் உங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுமானால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.

மீளவும் செல்கின்றோம் நாங்கள் நீதிமன்றத்தினுடைய கட்டளையை மதிக்க தயார் ஆனால் பொலிசாருடைய சட்ட விரோதமான உத்தரவுகளை ஒருபோதும் மதிக்கவும் மாட்டோம் செயல்படுத்தவும் மாட்டோம் போராட்டம் தொடரும்" என்றார்.

## அடக்குமுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் ஆர்பாட்டம் நடத்தப்பட்டது வவுனியா பழைய பேருந்துநிலையப்பகுதியில்காலை10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடக்கு கிழக்கில் நில அபகரிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும், மயிலத்தமடுமேச்சல் தரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளசட்டவிரோத குடியேற்றங்களை உடனே அகற்றவேண்டும், செட்டிகுளத்தில் கீழ் மல்வத்தோயா திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றங்களை தடுத்துநிறுத்த வேண்டும்,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தீர்வை வழங்கவேண்டும், இந்து ஆலயங்களைஆக்கிரமிக்கக்கூடாது,

அவற்றில் விகாரைகளை அமைக்காதே, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களைநிறுத்து, இஸ்ரேல் காஸா மோதலை சர்வதேசம் நிறுத்தவேண்டும் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் அவற்றுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.எ.சுமந்திரன், சி.சிறிதரன், இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், மாவட்ட அமைப்பாளர்ந.கருணாநிதி, மற்றும் கட்சியின்முக்கியஸ்தர்கள், புதியஜனநாயக மாக்ஸ்சிக லெனினிச கட்சியின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்

(100)

## போராடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆலயத்தில் வழிபாடு களை மேற்கொண்டமாணவர்கள்பின்னர் அங்கிருந்துஒன்றுகூடிபேரணியாக முற்கொண்டாஞ்சேனை பிரதான வீதியூடாக சித்தாண்டி நோக்கி வந்தனர்.

அவர்கள் சித்தாண்டி சந்தியில் 52ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மயிலத்த மடு மாதவனை பண்ணையாளர்க ளின் அறவழிப் போராட்ட களத்திற்கு அருகில் திரண்டு பண்ணையாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்து குரல் எழுப்பினார்கள்.

இச்சமயத்தில், பெருமளவான பொலிஸார் குறிவிக்கப்பட்டிருந்ததோடு, கலகமடக்கும் பொலிஸாரும், நீர்த்தாரையடிக்கும் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, தாயகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காநாமாகபோராடவேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், கூட்டு உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக செயற்பட வேண்டியுள்ளதாகவும் மாணவர்கள் கருத்து வெளியிட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு பேரணியின்போது அனுமதியின்றி செயற்பட்டமைக்காக பல்கலைக்கழக மாணவர்கள் அறுவர் செங்கலடி சந்திவெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாகவும், பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமைக்காகவும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினைச்சேர்ந்தஜவரும்கிழக்கு பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒருவருமாகஅறுவர்இவ்வாறுகைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் ஏறாவூர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

## தங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருணாரத்னவும் வைபவரீதியாக அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தருஷிகருணாரத்னவின்பாடசாலையான வலள ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி விளையாட்டுப் பாடசாலையில்தடகளபோட்டிகளில் ஈடுபட்டுள்ள 76 மாணவர்களும் அவருடன்இந்தநிகழ்வில்இணைந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தனர்.

பாடசாலை அதிபர் மற்றும் தருஷியின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் உட்பட 6 ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன் போது மாணவியின் திறமையைப்பாராட்டியஜனாதிபதி, 21 வருடங்களின் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தமைக்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

அதன்பின்னர்தருஷிஉள்ளிட்ட மாணவிகளுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடினார்.

விளையாட்டுப் பாடசாலை கருத்திட்டத்தின் கீழ் 1995 ஆம் ஆண்டு கண்டி மாவட்ட விளையாட்டுப் பாடசாலையாக வலள ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி உருவாக்கப்பட்டது, இப்பாடசாலை விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல சாதனைகளை படைத்துள்ளதுடன், தெற்காசியகனிஷ்டமட்டத்திலிருந்து ஒலிம்பிக் போட்டிகள் வரை அனைத்துசர்வதேசபோட்டிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியவிளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது..

இந்த மாணவர்களின் தடகள விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கு தேவையான வசதிகள் தொடர்பிலும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

200 மீற்றர் தடகள ஓடுபாதை, 300 மீற்றர் பயிற்சி ஓடுபாதை, 130மீற்றர்நீளஓடுபாதை உள்ளிட்டதாக விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்காக 220 மில்லியன் ரூபா செலவிட மதிப்பிடப்பட்டுள்ளதாக இதன் போது அறிவிககப்பட்டது.

இரண்டு கட்டங்களின் கீழ் இரு வருடங்களுக்குள் இந்த நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய மாகாண ஆளுநர்மற்றும்மாவட்டசெயலாளர் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை வழங்கியதோடு தேவையான நிதியை மத்திய அரசின் ஊடாக ஒதுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு விளையாட்டுப் பாடசாலைக்குத் தேவையான துரித புனரமைப்புப்பணிகளுக்காகமத்திய மாகாண பிரதான செயலகத்தின் கீழ் இந்த ஆண்டு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறையில் மட்டுமன்றி கல்வியிலும் முன்னேற்றம் காணுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிய ஜனாதிபதி அவர்கள் அனைவருக்கும் அவர்களின் எதிர்கால செயற்பாடுகளுக்காக வாழ்த்தினார்.

பின்னர் மாணவி தருஷி கருணாரத்ன உள்ளிட்ட மாணவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககுழுப்புகைப்படத்திலும் இணைந்துகொண்டார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகே, வலள ஏ ரத்நாயக்க கல்லூரி அதிபர் தம்மிக்க ஹேரத், தருஷி கருணாரத்னவின் வகுப்பு ஆசிரியை மற்றும் ஆசிரியைகள் மற்றும் தருஷி கருணாரத்னவின் பெற்றோர்கள் உள்ளிட்டப் பலரும் கலந்துகொண்டனர். அதன்பின்னர், கண்டி ஜனாதிபதி மாளிகையை பார்வையிடும் வாய்ப்பும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

## சீனத் தூதரகக் குழுவின் வடக்கு பயணம்

# வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வியலைச் சிதைக்கும் செயற்பாடு

## கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கண்டனம்

வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வியலை சிதைக்கும் செயற்பாடுகளைக் கண்டித்துகிழக்குபல்கலைக்கழகமாணவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

சீனத்தூதுவர்வடக்கிற்குவருகைதரவுள்ள நிலையில் இவ்வாறு மாணவர்கள் கண்டன அறிக்கையினை வெளியிட்டுள்ளார்கள்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கடற்றொழிலை அரசாங்கம் பலவந்தமாக அத்துமீறி மேற்கொண்டு வருவதால் தாம் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்துள்ளதாகவும், தமது வாழ்வாதாரத்தை சீர்செய்வதற்கு பதிலாக பொருளாதார ரீதியில் சாத்தியமில்லாத நிலையில் பாரம்பரிய வாழ்வாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்து-வதாகவும் வடமாகாண கடற்றொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வடமாகாணஆழ்கடல்கடற்றொழிலாளர்கள் இந்தப்பண்ணைகளால்மீன்இனப்பெருக்கம் பாதிக்கப்படும் என்றும், கடல் அட்டை ஏற்றுமதிக்கு மட்டுமே என்றும், அது தங்களுடைய முதன்மையான கடற்றொழிலுக்கு இல்லை என்றும்கடற்றொழிலாளர்சங்கத்தலைவர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பில் அல்லது மூன்றாம் நாட்டில் வசிக்கும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பல கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சொந்தமான பண்ணைகள் தாங்கள் வெறும் தொழிலாளர்கள்என்றும்கடற்றொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேபோன்ற நடவடிக்கை நாட்டிலுள்ள வேறுஎங்கும்மேற்கொள்ளப்படாதநிலையில், வட மாகாணத்தில் மட்டும் கடல் அட்டைப் பண்ணைகள் ஊக்குவிக்கப்படுவது ஏன் என்றும் கடற்றொழிலாளர் தலைவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். வடமாகாண கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கை ஏற்கனவே நலிவடைந்து வரும் நிலையில், அண்மைக்காலமாக சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்யும் கடற்றொழில் அமைச்சின் நடவடிக்கை கடற்றொழில் சமூகத்தினரிடையே மேலும் அதிருப்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடற்றொழிலாளர்களின்நலனைப்பணயம் வைத்து சீன நலன்களை ஊக்குவிக்கும் இத்தகைய முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதாக கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தலைவர், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கத்தலைவர், கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஆகியோர் சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கைக்கு தமது வேதனையை வெளிப்படுத்தியுள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் வடமாகாண கடற்றொழிலாளர்களுக்கு ஆதரவாக நின்று எமது வளங்களை பிற நோக்கங்களுக்காக ஆக்கிரமிக்கும்சீனஅரசாங்கத்தின்எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும்.

இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல்கள் குறிப்பாக சீனர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கும் அரசாங்கத்தின் முயற்சிய-ாகக் கருதப்படும் உத்தேச மீன்பிடி சட்ட-மூலத்தையும் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டிக்கிறனர்.

கடற்றொழிலாளர்களின்வாழ்வாதாரத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் மாணவர்கள்அமைப்புஎதிர்ப்புத்தெரிவிக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

## கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன் ரூபா உள்ளூராட்சி அமைச்சால் ஒதுக்க திட்டம்

### அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவிப்பு



உலக வங்கியின் உதவியுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால்நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்தின் ஊடாக சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஒன்பது பில்லியன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சிஇராஜாங்கஅமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்குட்பட்ட உள்-ளூராட்சிநிறுவனங்களில்இதுவரையில் உறுதிப்படுத்தப்படாத 8400 பணியாளர்கள் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் அரசாங்கத்தின் நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும்இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர இதனைக் குறிப்பிட்டார்.

ஜனவரிமாதத்தில்ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் 06 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது. (05)

## தோல்வி குறித்து விளக்கம் கோரிய இலங்கையின் கிரிக்கெட் சபை

நடப்பு உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணியின் தோல்விகுறித்துஸ்ரீலங்காகிரிகெட் வாரியம் அவசர விளக்கத்தை கோரியுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான நடப்புஉலகக்கிண்ணபோட்டியில் இலங்கை கிரிகெட் அணியின் செயற்பாடு குறித்து தேசிய அணியின் பயிற்சியாளர்கள் மற்றும் தேர்வாளர்களிடம் இருந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் வாரியம் குறித்த அவசர விளக்கத்தை கோரியுள்ளது. இந்தியாவுடன் இடம்பெற்றபோட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்திருந்தது.

அத்துடன் உலகக் கிண்ண தொடரில் இலங்கை அணி 7 போட்டிகளில் விளையாடி 5 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது.

அவசர விளக்கத்தைக் கோரியுள்ளதற்கான காரணம் கிரிகெட் அணியின் தோல்வியின் பின்னால் உள்ள காரணங்களைப்புரிந்துகொண்டு அணியின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே ஆகும் என ஸ்ரீலங்காகிரிகெட்தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்காகிரிகெட்விடுத்துள்ள விளக்ககோரிக்கையில்சிலமுக்கிய பதில்கள் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விளக்க கோரிக்கை**

1. போட்டிகளின் போது அணியின்உத்திகள்,தயார்படுத்தல்கள் மற்றும் முடிவுகள் பற்றி விளக்குதல்.
2. ஒவ்வொரு போட்டிக்கும் வீரர்களின் தேர்வுகளை நியாயப்படுத்துதல் மற்றும் வீரர்களின்மாற்றங்கள்தொடர்பில் விளக்குதல்.
3. வீரர்களின் உடல், உள ரீதியான பிரச்சினைகள் மற்றும் செயல்திறன் குறித்து விளக்குதல்.
4. போட்டி பகுப்பாய்வுகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் போட்டியில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து விளக்குவது.

போன்ற கோரிக்கைகளை ஸ்ரீங்கா கிரிகெட் வாரியம் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## தமிழ் மக்கள் தொடர்பாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை

### அவருக்கு ஆதரவளித்த விக்கி புலம்பல்

தமிழ் சமூகம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிறைவேற்றவில்லை என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதியளித்த போதும் அவை நிறைவேற்றப்படாததால் மக்கள் அதிருப்திஅடைந்துள்ளனர்எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்றுக்கொள்ளும் நோக்கில்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க,இவ்வாறானவாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும்தமிழ்மக்கள் அவருக்குவாக்களிக்கமாட்டார்கள் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தாலும், அரச திணைக்களங்களாலும் தமது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை மற்றும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்ககலந்துரையாடி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதி செய்வதாகத் தெரிவித்திருந்த போதும் அது இதுவரையில் நிறைவேற்றப்படவில்லைஎன்பது சுட்டிக்காட்டத்தக்கது. (05)

## தினேஷ் ஷாப்டரின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

சுமார் 06 மாதங்களாக பொலிஸ் பாதுகாப்பில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் சனிக்கிழமை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்புநீதிவான்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டதீர்ப்பின்பிரகாரம்குறித்த சடலம் கையளிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொரளை பொது மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த ாப்டரின் சடலம் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் பேரில் ஐந்து நிபுணர்கள் அடங்கிய சட்ட வைத்திய அதிகாரிகள் குழு முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

பின்னர் நீதிமன்ற உத்தரவின்படி நிபுணர் தடயவியல் மருந்து வாரியம் முன்பாக மீண்டும் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கழுத்து மற்றும்முகத்தில்அழுத்தமேற்பட்டதன் காரணமாக மரணித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதன்படி,இந்தச்சம்பவத்தின்மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாகத் தீர்ப்பளித்த நீதிவான் நீதிமன்றம், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரிடம் உத்தரவிட்டுள்ளார்.

அதன் பின்னர், தினேஷ் ப்டரின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படிவர்த்தகர்தினேஷாப்டரின் சடலம் அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வு திட்டத்தை நேர்மையாக முன்னெடுப்பது தமிழ் அரசு கட்சியே

### இரா.சாணக்கியன் இடித்துரைப்பு

சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை நேர்மையாகமுன்னெடுத்துக்கொண்டிருக்கும் ஒரே ஒரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி மாத்திரமேஎனத்தமிழ்த்தேசியகூட்டமைப்பின் மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கிழக்கின் சிவந்த சுவடுகள் எனும் நூலின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் தீர்வு மற்ற விடயம் எங்களுடைய பொறுப்புக் கூறல் இந்த இரண்டு விடயங்களில் பிரதானமான விடயங்களாக முன்னெடுத்துக்கொண்டு செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது சமகால அரசியலைப் பொறுத்த வரையிலே எத்தனையோ பிரதானமான கட்சிகள் இருந்தாலும் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை நேர்மையாக முன்னெடுத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி மாத்திரமே என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தால் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கபட்ட வன்முறைகள் தொடர்பாக சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார். (05)

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இனப் பாகுபாடு காட்டும் பொலிஸார்

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனைப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக வடக்கு, கிழக்க பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றையதினம் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். அவர்கள் சித்தாண்டி சந்தியில் 52ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்ட களத்திற்குஅருகில்திரண்டுபண்ணையாளர்களின் நியாயமானகோரிக்கையைநிறைவேற்றவேண்டும் என்று தெரிவித்து குரல் எழுப்பினார்கள்.

இந்தக் கவனவீர்ப்பு பேரணியின்போது அனுமதியின்றி செயற்பட்டமைக்காக பல்கலைக்கழக மாணவர்கள் அறுவர் செங்கலடி சந்திவெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதியின்றிப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனவும், பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஐவரும் கிழக்கு பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒருவருமாக அறுவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மாணவர்கள் அனுமதியின்றிப் போராடினார்கள் என்ற குற்றச்சாட்டுக்காக அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்திய பொலிஸார் மயிலத்தமடுமாதவனைப்பண்ணையில்அத்துமீறி எந்த அனுமதியுமின்றிக் குடியேறியிருப்போர் மீது மட்டும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர்.

அப்படி அத்துமீறிக் குடியேறி இருப்போர் மீது பொதுஅமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றனர் என்கிற குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு உத்தரவிட்ட பின்னரும் அது தொடர்பில் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதுமட்டுமல்ல, மயிலத்தமடுவில் அத்துமீறிக் குடியேறியோரை அங்கிருந்து அகற்றும்படி நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தும்கூட அதனைப் பொலிஸார் நிறைவேற்றவில்லை. இப்படிச் சிங்களவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க விரும்பாத பொலிஸார் இனவாதக் கண்ணோட்டத்தோடும் பின்னணியோடும் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மாணவர்களை, தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் மாணவர்களை, அனுமதியின்றிப் போராட்டம் நடத்தினார்கள் என்றுகூறிக் கைது செய்கின்றது.

இது ஒருபோதும் ஏற்புடையதல்ல, முற்றிலும் கண்டனத்துக்குரியது. இனப் பதற்றம் நிரம்பிய கிழக்கில்சட்டம்ஒழுங்குக்காவலர்கள்இதுபோன்று இனப் பாகுபாட்டோடு நடந்துகொள்வது அங்கு ஒருபோதும் அமைதியை ஏற்படுத்தாது. பெரும்பான்மையினருக்குஆதரவாகச்செயற்படும் இவர்களால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதுடன் முரண்பாடுகளுமே வளரும். எனவே இவ்வாறு இனப்பாகுபாட்டோடு செயற்படும் காவல்துறை அதிகாரிகளுக்குஎதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சட்டத்தை அனைவருக்கும் சமமாக நடத்தமுடியாத இத்தகைய அதிகாரிகள் துறைசார் நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி, சேவையில் இருந்தும் நிறுத்தப்படவேண்டும்.



# பாலஸ்தீன நிலைப்பாட்டில் இந்தியாவின் மாற்றம் ஏன்?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பெருமளவில் போர் நிகழும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்திருக்கின்றன. குறிப்பாக, பலஸ்தீனத்துக்கு சீனா, ஈரான், சிரியா, சவுதி அரேபியா, ஏமன், கத்தார், தென்னாப்பிரிக்கா, லெபனான் போன்ற நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, நோர்வே, பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து, உக்ரைன், பிரேசில், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.



**இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவில் இந்தியா**

பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் போர் தொடங்கிய போதே இந்தியப் பிரதமர் மோடி, இந்தக் கடினமான நேரத்தில் இஸ்ரேலின் பக்கம் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம் என்று இஸ்ரேலுக்கு தனது ஆதரவை தெரிவித்திருந்தார்.

பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் இந்தியா உறுதியாகக் கண்டிக்கிறது எனத் தெரிவித்த மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசி வாயிலாக, கடினமான இந்தத் தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்திய மக்கள் தங்கள் உறுதியான ஆதரவை அளித்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

1974ஆம் ஆண்டில், யாசர் அராபத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை அமைப்பை (ஊஊஸிநு) பலஸ்தீன மக்களின் ஒரே மற்றும் சட்டபூர்வமான பிரதிநிதியாக அங்கீகரித்த முதல் அரபு அல்லாத நாடாக இந்தியா இருந்தது. அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் யாசர் அராபத்துக்கும் இடையே வலிமையான உறவு இருந்தது.

பலஸ்தீன மக்களின் உரிமைகளை ஆதரிக்கும் வரலாற்றுப் பாரம்பரியத்தை இந்தியா கொண்டுள்ளது. பலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக நீண்ட காலம் இருந்தது.

**பலஸ்தீன நிலைப்பாட்டில் இந்தியா**

1988இல், பலஸ்தீன அரசை அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. 1996ஆம் ஆண்டில், இந்தியா தனது பிரதிநிதி அலுவலகத்தை காஸாவில் திறந்தது. 2003 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானத்தை இந்தியாவும் ஆதரித்தது. இது இஸ்ரேல் பிரிவினைச் சுவரைக் கட்டும் முடிவை எதிர்த்தது.

> இந்தியாவின் ஆதரவு முன்பு பலஸ்தீனத்துக்கே இருந்தது. இப்போது அது இஸ்ரேலுக்கு மாறிவிட்டது. அதேநேரம் இந்த மோதலுக்கான தீர்வு சுதந்திர பலஸ்தீனத்தை உருவாக்கு-வதுதான் எனும் ரஷ்யா கூறியுள்ளமை சர்வதேச உறவுகளின் முக்கிய மாற்றமாக கருதலாம்

2011இல், பலஸ்தீனத்தை யுனெஸ்கோவின் முழு உறுப்பினராக்குவதற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. 2012 ஆம் ஆண்டில், ஐ.நா.வில் வாக்களிக்கும்உரிமைஇல்லாமல் பாலஸ்தீனத்தை உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடாக மாற்றவேண்டும் என்ற ஐ.நா பொதுச் சபை தீர்மானத்தை பிறநாடுகளுடன் இணைந்து இந்தியா முன்மொழிந்தது. இந்த முன்மொழிவுக்கு ஆதரவாக இந்தியாவும் வாக்களித்தது. 2015 செப்டம்பரில், ஐநா வளாகத்தில் பலஸ்தீனக் கொடியை நிறுவ இந்தியாவும் ஆதரவளித்தது.

**யாசர் அராபத் - இந்திரா காந்தி உறவு**

பலஸ்தீனியர்களுக்குபல்வேறு வகையான பொருளாதார உதவிகளையும் இந்தியா நீண்ட காலமாக வழங்கியுள்ளது.

சர்வதேச மற்றும் இருதரப்பு அளவிலான வலுவான அரசியல் ஆதரவுடன் , முன்னாள் பிரதமர் இந்திராகாந்திக்கும், பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவராக இருந்த யாசர் அராபத்துக்கும் இடையே நல்லுறவு தொடர்ந்தது.

காஸா நகரில் உள்ள அல் அசார் பல்கலைக்கழகத்தில் ஜவஹர்லால் நேரு நூலகம் மற்றும் காஸாவின் டெய்ர் அல்-பலாவில் உள்ள பாலஸ்தீன தொழில்நுட்பக் கல்லூரியில் மகாத்மா காந்தி நூலகம் உள்ளிட்ட மாணவர் செயல்பாடு மையங்களை உருவாக்க இந்திய அரசு உதவியுள்ளது. இவை தவிர பலஸ்தீனர்களுக்கு பல திட்டங்களை உருவாக்கவும் இந்தியா உதவி வந்தது.

பெப்ரவரி 2018, பலஸ்தீன பகுதிக்கு நரேந்திர மோடி சென்றார். அப்போது, பலஸ்தீன நிர்வாக அதிபர் மஹ்மூத் அப்பாஸ், மோடிக்கு நாட்டின் உயரிய விருதான 'கிராண்ட் காலர் ஆஃப் தி ஸ்டேட் ஆஃப் பாலஸ்தீன' விருதை வழங்கினார்.

கடந்த ஆண்டு, பலஸ்தீனர்களுடனான சர்வதேச ஒற்றுமை தினத்தின் போது, பிரதமர் மோடி ஒரு செய்தியை வெளியிட்டார். இதில் பாலஸ்தீனத்திற்கு இந்தியாவின் நிலையான ஆதரவை பிரதமர் வலியுறுத்தினார். இந்தியாவும் பலஸ்தீனமும் நட்புறவு கொண்ட நாடுகளாக வரலாற்று உறவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

பலஸ்தீன மக்கள் சுயசார்பு மற்றும் கண்ணியத்துடன் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டைப் பெறுவதற்கு நாங்கள் எப்போதும் ஆதரவளித்து வருகிறோம்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நேரடிப் பேச்சுநடைபெறும் என்றும், இதன் மூலம் அவர்கள் ஒரு விரிவான மற்றும் பரஸ்பரம் ஒப்புக்கொண்ட தீர்வைக் காண்பார்கள் என்றும் நம்புகிறோம் என பிரதமர் மோடி கூறினார்.

**இஸ்ரேலுக்கு இந்திய ஆதரவு**

1948இல் இஸ்ரேல் நாட்டை உருவாக்குவதற்கான தீர்மானம் ஐ.நா சபையில் கொண்டுவரப்பட்டபோது, அதை எதிர்த்து வாக்களித்த நாடு

(5ஆம் பக்கம் பார்க்க...)

# பாலஸ்தீன நிலைப்பாட்டில்...

இந்தியா. அதேபோல, முன்னாள் பிரதமர் நேரு, இந்திரா காந்தி என அனைத்து இந்தியப் பிரதமர்களும் பலஸ்தீனத்தையே ஆதரித்துவந்தனர்.

1981 பலஸ்தீன மக்களுடன் இணைந்திருப்போம் (Solidarity with the Palestine people) என்ற வாசகத்துடன் இந்திய - பலஸ்தீனக் கொடிகள் மற்றும் மக் கள் இடம்பெற்றிருக்கும் தபால்தலையையும் இந்தியா வெளியிட்டு பலஸ்தீனுக்குத் தனது தார்மிக ஆதரவை வழங்கியது. தற்போதைய போர்ச் சூழலில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியும் தனது ஆதரவை பலஸ்தீனத்துக்கு வழங்கியிருக்கிறது.






**பாஜக அரசின் நிலைப்பாடு மாற்றம்**

2014ஆம் ஆண்டு பா.ஜ.க வெற்றிபெற்று பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு இஸ்ரேல் - பலஸ்தீன நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இதுவரை எந்த இந்தியப் பிரதமரும் இஸ்ரேலுக்குச் சென்றிருக்காத நிலையில், 2017 முதன்முறையாக அந்த நாட்டுக்குச் சென்று பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இஸ்ரேலுக்குச் சென்ற முதல் இந்திய பிரதமர் மோடி என்ற பெயரையும் பெற்றார். அதேபோல, தற்போதைய போர்ச் சூழலிலும் இஸ்ரேலுக்கே தனது முழு ஆதரவையும் அளித்திருக்கிறார்.

வலதுசாரி - இடதுசாரி, அமெரிக்கா - ரஷ்யா என உலக நாடுகள் இரண்டு தரப்பாக அணிவகுத்தபோதே இந்தியா அணிசேராக் கொள்கையுடன் இரண்டு தரப்புக்கும் இல்லாமல் நடுநிலை வகித்தது. இரண்டு தரப்பு நாடுகளிடமும் நட்புறவைப் பேணிவந்தது. அனைத்துச் சூழலிலும் மதச்சார்பற்ற ஜனநாயக நாடாகத் தன்னை இருத்திக்கொள்வதிலேயே குறியாக இருந்து வந்தது. இந்த நிலையில், 2014 இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க வெற்றிபெற்று நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு இந்தியாவின் நிலைப்பாட்டில் சிறிது மாற்றங்கள் தென்படத் தொடங்கின.

ஆசியப் பெருங்கண்டத்தில் ஓங்கிவரும் சீனாவின் அபரிமிதமான அதிகார மற்றும் பொருளாதார வளர்ச்சி இந்தியாவுக்கு மட்டுமன்றி அமெரிக்க மேற்குலக நாடுகளுக்கும் சவாலாக அமைந்தன. ஆசிய கண்டத்தையும் தாண்டி, ஆபிரிக்க - ஐரோப்பிய நாடுகளுக்கும் தனது பட்டுப்பாதைக் கனவை சீனா விரிவுபடுத்திச் செல்வதும் பெரும் தலைவலியாக இந்தியாவிற்கு அமைந்து வந்தது.

**அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் இந்தியா ?**

சீனா தொடர்ச்சியாக இந்தியாவின் எல்லைப்பகுதிகளில் அத்துமீறி நுழைவது, ஆக்கிரமிப்பு - கட்டுமானங்களை மேற்கொள்வது, இந்திய இராணுவத்தினரோடு மோதலில் ஈடுபடுவது அதிகரித்தபடி சென்றமையால் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளுடன் இந்தியா நெருக்கத்தை அதிகரித்தது.

பசிபிக் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்காக அகூஸ் (புஷீலுஷீறீ) எனும் கூட்டமைப்பை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் ஏற்படுத்திக் கொண்டது. பா.ஜ.க ஆட்சியின் போதும் இந்தியா நடுநிலையான நாடாக இருந்து வருகிறது என்றாலும்கூட, மாறிவரும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு சூழல்களில் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டையே எடுத்துவருகிறது. அதற்கேற்ப, அமெரிக்கா தோள் கொடுக்கும் இஸ்ரேல் நாட்டுடனும் இந்தியா தனது உறவை மேம்படுத்திவருகிறது. தற்போதைய போர்ச் சூழலில் சீனா, பலஸ்தீனத்தை ஆதரிக்கிறது. ரஷ்யாவும் இந்தப் போரில் இஸ்ரேலுக்கு ஆதரவான அமெரிக்கத் தலையீட்டைக் குறிப்பிட்டு மூன்றாவது நாடு நுழைகிறது என எச்சரித்திருக்கிறது. வழக்கம்போல அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. இந்தியாவும் வழக்க மான தனது நடுநிலை, சமாதானம், போர் நிறுத்தம் என்ற வார்த்தைகளைவிட்டு இஸ்ரேலுக்கே தனது ஆதரவு என வெளிப்படையாகப் பேசியிருக்கிறது.

**இஸ்ரேல், இஸ்லாமியர்களுக்கு எதிரானதா ?**

இஸ்ரேல், இஸ்லாமியர்களுக்கு எதிரானது என்ற பிம்பம் பெருமளவில் உருவாகியிருக்கிறது. பா.ஜ.கவும் இஸ்லாமியர்களைப் புறக்கணிக்கும் அரசியலைச் செய்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பா.ஜ.க ஆதரவாளர்கள் இஸ்ரேலை விரும்புகின்றனர்.

இந்தியாவில் இஸ்ரேலுக்கு ஆதரவு என்பது இஸ்லாமியர்களுக்கு எதிரான உணர்வால்தான் ஏற்படுகிறது. அதேநேரம் காங்கிரஸ் கட்சி பலஸ்தீனத்துக்கு ஆதரவு எனும் பேரில் தீவிரவாதத்துக்கு துணைபோகிறது என பா.ஜ.க குற்றம் சாட்டிவருகிறது.

இஸ்ரேலில் இன்று என்ன நடக்கிறதோ, அதைத் தான் 2004-2014 ஆம் ஆண்டுகளுக்கு இடையே (UPA அரசாங்கத்தின் பதவிக்காலம்) இந்தியா சந்தித்தது என்று பா.ஜ.க கூறியுள்ளது.

**சுதந்திர பாலஸ்தீனம்தான் தீர்வு சீனா - ரஷ்யா**

ஏற்னெவே சீனாவும் சுதந்திர பாலஸ்தீனம்தான் தீர்வு என்று கூறியிருந்த நிலையில், தற்போது ரஷ்யாவும் இதையே வலியுறுத்தி உள்ளது.

இவ்வாறு நாளுக்கு நாள் தீவிரமடைந்துவரும் போரில், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இஸ்ரேல் பக்கம் நிற்கின்றன. கூடவே, இஸ்ரேலுக்கு ஆயுதங்களையும் அனுப்பிவருகிறது அமெரிக்கா. இவ்வாறு, அமெரிக்கா இஸ்ரேல் பக்கம் நிற்பதால், ரஷ்யாவும் அதன் நட்பு நாடான சீனாவும் பாலஸ்தீனத்தை ஆதரிக்கின்றன.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தனி நபரின் அதிகாரத்திற்குள் நாட்டை வைத்திருப்பதே ரணிலின் நோக்கம்

நாட்டில்எந்தத்தேர்தலையும்நடத்தாமல் காலத்தை வீணடிப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



தேர்தலைஆராய்வதற்குகுழுவொன்று நியமிக்கபபட்டுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா போன்ற விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தேர்தலை பிற்போடும் செயற்பாடுகளையே ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் நாட்டை தனி நபரின் அதிகாரத்திற்குள் வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளையேமுன்னெடுத்துள்ளதாகவும் தற்போது சர்வதிகார ஆட்சியே நடத்தப்பட்டு வருவதாகவும்அவர்குற்றம்சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில்இ நாட்டில் தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஆட்சியாளர்கள் ஆட்சியமைக்க வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் அனைவரும் எதிர் பார்த்துள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

2023 இல் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 69 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுபாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுபாட்டு பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 69,231 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்; அதிகபட்சமாக கொழும்பு மாவட்டத்தில் 14,634 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 39பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண ரீதியில் அதிகபட்சமாக மேல் மாகாணத்தில் 33,139 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த ஏழு நாள்களில் மொத்தம் 1,453 டெங்கு நோயாளர்கள்பதிவாகியுள்ளனர்எனத்தேசிய டெங்கு கட்டுபாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (05)

## சீனக் குழு வடக்கிற்கு விஜயம்

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் வவுனியாவிற்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் வரவேற்றதுடன்இ அவருடைய தலைமையில் சீன அரசாங்கத்தால் வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது சீனத் தூதுவர் கீ சென்ஹொங்இ சீன அரசாங்கத்தின் வவுனியா மாவட்டத்திற்கான நிவாரண உதவித் திட்டத்தை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியாஇ வவுனியா தெற்கு உள்ளடங்களாக 4 பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 500 குடும்பங்களுக்கு சீனாவால் 7500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் முதல் கட்டமாக வழங்கப்பட்டன.

சீன பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த மக் களால் வழங்கப்படும் குறித்த உலர் உணவுப் பொருள்களை சீனா - இலங்கை பௌத்த நட்புறவுத் திட்டத்தின் கீழ் சீனத் தூதுவர் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார். (05)

## மயிலந்தமடு அத்துமீறிய காணி அபகரிப்புக்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை கண்டனம்

மட்டக்களப்பு மயிலுத்தமடு மாதவனை பகுதியில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய காணி அபகரிப்பைக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.கீதன் தெரிவித்துள்ளார்.

மயிலந்தனைஇமாதவனைபகுதிகளில் மட்டக்களப்பு கால்நடை வளர்ப்பவர்கள் பயன்படுத்திய நிலப்பகுதிகளை அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் இருந்து மயிலுத்தமடுவுக்கு வருகை தந்த சிங்கள மக்கள் அத்து மீறி காணிகளை அபகரித்து விவசாய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பு கால்நடை வளர்ப்பவர்களின் கால் நடைகளைத் தாக்கி அநாகரிமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மயிலுத்தமடு மக்கள் வாழ்வாதார ரீதியாக பாரிய பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர். குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் எடுத்து அத்துமீறிய காணி அபகரிப்பை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தமக்கான நீதி கோறி மட்டக்களப்பு கால்நடை பணியாளர்கள் 50 நாள்கள் கடந்து கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை ஆதரவு வழங்குவதாகவும் குறித்த போராட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைக்கு மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண ஆளுநர்இ மாவட்ட செயலாளர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை பொதுச் செயலாளர் ச.கீதன் மேலும் தெரிவித்துள்ளார். (05)



## ஆட்சிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதவீதம் குறைவாகவே இருந்தது.

பொருளாதார நம்பகத் தன்மையை கணக்கிடுவதற்கு தற்போதைய பொருளாதார நிலைமைகள் மற்றும் அதன் வழிமுறைகளை மதிப்பிடும் பல தேர்வு வினாக்கள் பயன்படுத்தப்பட்டன.

'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பு வருடத்திற்கு மூன்று முறை நடத்தப்படுகிறது, மேலும் நாடளாவிய ரீதியில், தேசிய அளவிலானபிரதிநிதித்துவபதில்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டே இக்கருத்துக்கணிப்பு இடம்பெறுகிறது.

இக்கணக்கெடுப்பு மாதிரி மற்றும் முறையானது 95சதவீதமான நம்பிக்கை மட்டத்தில் அதிகபட்சமாகவும் பிழை 3சதவீதத்துக்கும் குறைவாக கட்டுப்படுத்தும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

## மேலிடத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்குநேற்றையதினம் சென்றிருந்த அவர் சித்தாண்டியில் தொடர்ச்சியாக52நாட்களாகபோராடி வருகின்ற பண்டையாளர்களைச் சந்தித்ததோடு, அப்போராட்டத்திலும் பங்கேற்றிருந்தார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் சுரேஷ் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், வடக்கு,கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த கவனயீர்ப்புபேரணி மற்றும் போராட்டத்தின் பின்னர் அவர்களை பொலிஸார் கைது செய்த நிலையில் செங்கலடி சந்தி வெளி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாணவர்களுடன் கலந்துரையாடினார். அதன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

போராட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதென்பது அவற்றைத் தடுப்பதற்காக அல்ல. மாறாக பொதுமக்களுக்கு இடையூறுகள்ஏற்படாது அவர்களை வழிப்படுத்துவதற்காகும்.

அவ்வாறான நிலையில், பல்கலைக்கழக மாணவர்கள் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக போராட்டப் பேரணியை நிறைவு செய்ததன் பின்னர் அவர்கள் வெளியேறிச் சென்றுகொண்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையானது திட்டமிட்டதாகும்.

விசேடமாக, மேலிடத்து உத்தரவின்றி அவ்வாறான கைதுகள்முன்னெடுக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. ஆகவே இவ்விதமானபொலிஸாரின்அடக்குமுறைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றார்.

## ராஜபக்ஷக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவன்அல்லன்.அவர்களிடத்தில் நான் ஐந்து சதத்தினைக்கூட பெற்றுக்கொண்டதுகிடையாது. நாம் அனைத்தையும் நாட்டுக்காகவும், எதிர்காலத்திற்காகவும் முன்னெடுத்தோம். தற்போது எமது வியாபாராம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் ராஜபக்ஷ முகாமைத்தவிர எமக்கு எந்தத் தெரிவும் இருந்திருக்கவில்லை. அதனால்தான் அதற்குள் இருந்த கோட்டாபயவை நாம் ஜனாதிபதியாககொண்டுவருவதற்கு ஆதரவளித்தோம். அதற்காக அரசியலில் அனைத்தும் தெரிந்தவர்கள் தாமே என்ற எண்ணத்தில்யாரும்உள்ளார்களா என்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போது நாம் நேரடியான அரசியலுக்கு வந்துள்ளோம். நாட்டினை பொருளாஜூதார நெருக்கடிக்குள்தள்ளியுள்ளார்கள். அதனை மீட்டெடுத்து சரியான பாதைக்கு கொண்டு வரவேண்டியுள்ளது. அந்தப் பணியை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# சகல உரிமைகளுடனும் மலையக மக்கள் வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்து



இலங்கையை வாழவைத்த மலையகத்; தமிழ் மக்களை அனைத்து உரிமைகளுடனும் வாழ வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு.கா. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

'நாம் 200' எனும் தேசிய நிகழ்வுக்கு வழங்கியுள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஆரம்பக்காலம் முதல் திராவிட முன்னேற்றக்கழகம் குரல் கொடுத்து வருவதாகவும் தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் மலையகத் தமிழ் மக்களின் நீதியும், உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் மலையகத்தமிழர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் போல கல்வியிலும், பொருளாதார ரீதியிலும் முன்னேற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த யாழ். பல்கலை மாணவர்கள் கைது

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதி கால்நடை பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆறு பேர் சந்திவெளி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும்இணைந்துநேற்று காலை மயிலத்தமடு, மாதவனை பகுதி கால்நடை பண்ணையாளர்களுக்கு ஆதரவாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

முறக்கொட்டாஞ்சேனை மாரியம்மன் ஆலய முன்றிலிலிருந்து பேரணியொன்றை ஆரம்பித்த மாணவர்கள் சித்தாண்டியில் கால்நடைபண்ணையாளர்களின் போராட்டம்இடம்நோக்கிஊர்வலமாக சென்றுகொண்டிருந்த நிலையில் அங்குவந்த பொலிஸருக்கும் மாணவர்களுக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரணி, சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பண்ணையாளர்களின் போராட்டம் நடைபெறும் பகுதிக்கு வந்தபோது அங்கு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டத்திற்கு அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அப்பகுதியில் கலகமடக்கும் பொலிஸார் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தும் ஆயுதங்களுடன் களமிறக்கப்பட்டிருந்தபோதும் மாணவர்கள் வீதியில் மருங்கில் தமது போராட்டத்தை முன்னெடுத்திருதிருந்தனர்.

வடக்கு கிழக்கு பகுதிகள் தமிழர்கள் தாயகம், அரசாங்கமே மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதியைக்கொடு, கொல்லாதே கொல்லாதே பசுக்களை கொல்லாதே, வெளியேறு வெளியேறு எமது இடத்தை விட்டு வெளியேறுபோன்றகோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்,கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தபோராட்டம்நிறைவடை;து கிழக்குபல்கலைக்கழகத்திற்குதமது பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்த மாணவர்களை வந்தாறு-மூலை,களுவன்கேணி பகுதியில் இடைமறித்த சந்திவெளி பொலிஸார் அவர்களில் ஆறு பேரை கைது செய்து செய்துள்ளனர். (05)

# உயர் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தள்ளுபடி

அரசு விதித்துள்ள புதிய வரிக் கொள்கைகளுக்கு அமைவாக தமது சம்பளத்தில் இருந்து வரி அறவிடப்படுவதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி நீதித்துறை அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 3 தரப்பினர் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

அந்த மனுதாரர்களில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரும் உள்ளடங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹற்றன் நகரை அண்மித்துள்ள பகுதிகளில் பொலிஸார் குவிப்பு



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹற்றன் நகரிலுள்ள கடைகளை சோதனையிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது பல கடைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு பொருந்தாத பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்குஎதிராகவழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

தீபாவளி பண்டிகை நிறைவடையும் வரையில் முடியும் வரை இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை, கொழும்பிலுருந்து ஹற்றன் நோக்கி பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஹற்றன் மற்றும் ஹற்றனை அண்மித்த பகுதிகளில் பெருமளவான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (05)

# விகாரமஹா தேவி பூங்காவை கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்க பணிப்பு

விகாரமஹா தேவி பூங்காவை கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நகரஅபிவிருத்திமற்றும்வீடமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்அபிவிருத்திநடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்ட ஏனைய சொத்துக்களையும் உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்குமாறு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் கட்டுப்பாட்டில் இருந்த விகாரமஹாதேவி பூங்கா 2011ஆம் ஆண்டு திருத்த வேலைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையால் கையகப்படுத்தப்பட்டது.

விகாரமஹா தேவி பூங்கா திருத்த வேலைகள் செய்யப்பட்டு பத்து வருடங்கள் கடந்துள்ள நிலையில், சிறு புனரமைப்பு பணிகளை முடித்து குறித்த பூங்காவை கொழும்பு மாநகர சபைக்கு மாற்றும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (05)

# போதைப்பொருள் கடத்தலிலீடுபட்ட கான்ஸ்டபிளுக்கு விளக்க மறியல்

போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட 09 சந்தேகநபர்களும் தெரியந்தர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 7 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளையும் மற்றைய சந்தேக நபர்களையும் 4 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)



# வடக்கு மக்களுக்கு சீன நிதியில் வீடுகள்

வடமாகாண மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு நேற்றுபயணித்திருந்தநிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்கினாலும் அதற்குத் தீர்வு காணும் வகையில் சீனா அரசாங்கம் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அதற்காக செயற்படும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சீனா தொடர்தும் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்த அவர், இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சீனா அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் சீனா அரசாங்கம் 155 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கியுள்ளது என்றும் அதில் நிவாரணப் பொதிகள் வழங்குவது மட்டுமன்றி மீன்பிடி வலைகள் பெறுவதற்கும்பயன்படுத்துவதாகவும் மிகுதிப் பணத்தில் வட மாகாணத்தில் வீடு அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# 10 தூதுவர்கள் புதிதாக நியமனம்

இலங்கைக்கானபுதியதூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள 10 பேர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை)எகண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

லெட்வியாஇராச்சியம்,பிலிபைன்ஸ், கம்போடியா, போர்த்துக்கல் குடியரசு, சிரினாம் குடியரசு, ஜிபூட்டி குடியரசு, அங்கோலா குடியரசு, பின்லாந்து குடியரசு, பொலிவேரியன் குடியரசு,வெனிசுலா மற்றும் நோர்வே குடியரசு ஆகிய நாடுகளுக்காக இவ்வாறு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நற்சான்றிதழ்கள் கையளித்த புதிய தூதுவர்களின்பெயர்கள்பின்வருமாறு:

1 ஜூரிஸ் பொன் - லெட்வியா குடியரசு தூதுவர்

2 லியோ டிட்டோ அவுசன் - பிலிபைன்ஸ் குடியரசு தூதுவர்

3. கே குவாங் - கம்போடியா இராச்சிய தூதுவர்

4. ஜோவா மெனுவல் மென்தெஸ் டிஅல்மெய்தா- போர்த்துக்கல் குடியரசு தூதுவர்

5. அருண்குமார் ஹர்டியன் - சிரினாம் குடியரசு தூதுவர்

6. இஸ்ஸே அத்துல்லாகி அசோவே - ஜிபூட்டி குடியரசு தூதுவர்

7. கிளெமென்டே பெட்ரோ கெமென்ஹா - அங்கோலா குடியரசு தூதுவர்

8. கிம்மோ லஹ்டெவிர்தா - பின்லாந்து குடியரசு தூதுவர்

9. கபயாரோட்ரிகுவேகொன்சலேஸ் - வெனிசூலா பொலிவேரியன் குடியரசு தூதுவர்

10. மேஎலின் ஸ்டெனர் - நோர்வே இராச்சியம் தூதுவர்

இந்தநிகழ்வில்வெளியுறவுஅமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# பொலிஸ்மா அதிபரின் சேவைக்கால நீடிப்பு அரசமைப்புக்கு முரணானது

## சட்டத்தரணிகள் கூட்டிணைவு கடும் விசனம்

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவைக்கால நீடிப்பு அரசமைப்புக்கு முரணானது என சுட்டிக்காட்டியிருக்கும் சட்டத்தரணிகள் கூட்டிணைவு, பொலிஸார் மீதான மக்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்யக்கூடிய வகையில் உரிய காலப்பகுதியில் அப்பதவிக்கு பொருத்தமானநபரை நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கும் அரசமைப்பு பேரவைக்கும் உண்டு எனத் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவால் நான்காவது தடவையாக சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய, ஜயம்பதி விக்கிரமரத்ன, ஜெப்ரி அழகரத்னம், சாலிய பீரிஸ், உபுல் குமாரபெரும உள்ளிட்ட மேலும் பலர் அடங்கிய சட்டத்தரணிகள் கூட்டிணைவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

அரசமைப்பின் பிரகாரம், பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதில் நிலவும் தோல்வி மற்றும் அதன் விளைவாக பொலிஸ் திணைக்களத்திலும் குற்றவியல் நீதிகட்டமைப்பிலும் ஏற்படக்கூடிய மிதமிஞ்சிய தாக்கம் என்பன தொடர்பில் மிகுந்த கரிசனை அடைகிறோம்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன கட்டாய ஓய்வுக்குரிய வயதெல்லையை கடந்திருக்கின்ற போதிலும் கடந்த 8 மாத காலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அவரது பதவி சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதன் மீட்சியாக அரசியலமைப்பு பேரவையின் அனுமதியின்றி கடந்த வெள்ளிக்கிழமை (3) ஜனாதிபதியினால் சி.டி.விக்கிரமரத்னவின் சேவைக்காலம் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்தவரை கடந்த சில தசாப்த காலமாக தலைமைத்துவத்தில் நிலவிய குறைப்பாடுகள் பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கையிழப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. அது மாத்திரமன்றி சுயாதீனத்துவமின்மை, அரசியல்மயமாக்கம், சந்தேகநபர்களை சித்திரவதைக்குட்படுத்தல், பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புக்கள் மற்றும் உரியவாறான தொழில் முறை செயற்பாடின்மை என்பனவும் இந்த நம்பிக்கை இழப்புக்கு வழிகோலின.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸார் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீளுறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

அரசமைப்பின் 41(சி) பிரிவின்படி பொலிஸ்மா அதிபர் பதவிக்கான பொருத்தமான நபர் ஒருவரைப் பரிந்துரைப்பதுடன் அரசமைப்பு பேரவையின் அனுமதியைப்பெற்றதன் பின்னர் மாத்திரம் அவரை அப்பதவிக்கு நியமிக்கின்ற பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. அதேவேளை குறித்த பதவிக்கு நியமிக்கப்படும் நபர் அதற்குப் பொருத்தமானவர் என்பதையும் அதற்கான தகுதி மற்றும் சிறப்பான சேவை வழங்கல் என்பவற்றைக் கொண்டிருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு ஜனாதிபதி மற்றும் அரசமைப்பு பேரவைக்கு உண்டு.

அரசமைப்பின் ஊடாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள மீயுயர் தராதரம் மற்றும் சிறந்த ஆட்சி நிர்வாகம் என்பன நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பொலிஸ்மா அதிபர் தெரிவு செயன்முறையின் போது உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை நினைவூட்டுகிறோம்.

அடிப்படை உரிமைகளை மீறியதாகவோ அல்லது சட்டவிரோத குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவோ கண்டறியப்பட்டவர்களும் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் அல்லது சித்திரவதை, சட்டவிரோத நடவடிக்கை தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளவர்களும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் உள்ளடங்கலாக மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் தமக்குரிய கடமைகளில் இருந்து விலகிச் செயற்பட்டவர்களும் இப்பதவிக்கு நியமிக்கப்படக்கூடாது என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# 30 வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட இளைஞர் மட்டக்களப்பில் மாட்டினார்

மட்டக்களப்பு, வெலிகந்தை தொடக்கம் அக்கரைப்பற்று வரையான பிரதேசங்களில் சுமார் 30 வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்களோடு தொடர்புடைய 28 வயதான இளைஞர் ஒருவரை வாழைச்சேனையில் வைத்து சனிக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு, சந்தேக நபர் திருடிச் சென்ற மடிக்கணினி மற்றும் தங்க ஆபரணங்களை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மற்றும் மே மாதங்களில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கண்ணகி அம்மன் வீதியில் அமைந்துள்ள வீடுகளை பூட்டிவிட்டு, வீட்டு உரிமையாளர்கள் வெளியே சென்றுவிட்டு, இரண்டு மூன்று தினங்கள் கழித்து, தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவந்து பார்த்தபோது, வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டு மடிக்கணினி, தங்க மோதிரம், பணம் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் போன்றவை திருடப்பட்டுப்போயிருந்த சம்பவங்கள் பல அடுத்தடுத்து இடம்பெற்றன.

இது தொடர்பாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனநாயக்க தலைமையில் இடம்பெற்றுவந்த விசாரணையின் அடிப்படையில், வாழைச்சேனை ஹாயிரா பள்ளி வீதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரை பொலிஸார் அவரது வீட்டில் வைத்து மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் வெலிகந்தை தொடக்கம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல பிரதேசங்களில் உள்ள சுமார் 30 இற்கு மேற்பட்ட வீடுகளை உடைத்து கொள்ளைச் செயல்களில் ஈடுபட்டவர் என்பதும் அவர் மீது முன்னரே பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையினூடாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய நபரை

# பிணை எடுக்கச்சென்றவர் பொலிஸார் மீது தாக்குதல்

## அவரும் அதிக மதுபோதையில் இருந்தாராம்

கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அதிக மதுபோதையில் பொலிஸ் தலைமையகத்துக்குள் நுழைய முற்பட்டபோது, அவரைத் தடுக்க பொலிஸ் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு பொலிஸ் பிணையில் கைச்சாத்திடுவதற்காக குறித்த நபர் அதிக மதுபோதையில் பொலிஸ் தலைமையகத்துக்குள் நுழைய முற்பட்டுள்ளார். அப்போது பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரைத் தடுத்து நிறுத்தியபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)

# பண மோசடி தொடர்பில் சந்தேகத்தில் தேடப்படும் இருவர் குறித்து மக்களின் உதவி நாடும் பொலிஸார்

பண மோசடி தொடர்பில் சந்தேகத்தில் தேடப்படும் ஆண் மற்றும் பெண் ஆகியோரைக் கைது செய்வதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

பத்தரமுல்லை வீதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் தோட்டம் ஒன்றைப் புனரமைப்பதற்காக இந்தச் சந்தேக நபர்கள் குறித்த நிறுவனத்திடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபாவைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் பெற்றுக்கொண்ட தொகை 9,943,108.03 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர். இந்த பணத்துக்கு நிர்மாணப்பணிகளை மேற் கொள்ளாமல் சந்தேக நபர்கள் பணம் மோசடி செய்தமை தொடர்பில் மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் குறித்த நிறுவனம் முறைப்பாடு செய்துள்ளதுடன், அதன்படி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் அடிப்படையில், விக்னேஸ்வரன் கணேசன் (வயது 31), ரீவல் நிரோனி ராஜரத்தினம் (வயது 36) ஆகிய சந்தேக நபர்களே பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.

இவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால், விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி 071 - 8137373 அல்லது 0112852556 ஆகிய இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோருகின்றனர்.

சந்தேக நபர்களின் புகைப்படங்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன. (05)

# 35 பவுண் தங்க நகைகள் யாழ்ப்பாணத்தில் திருட்டு

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் வீடொன்றில் 135 பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் திருட்டுப்போன சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பதிவாகியுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில், மஞ்சத்தடி பகுதியில் உள்ள வீடொன்றில் அந்தியேட்டி கிரியை நடைபெறவிருந்த நிலையிலேயே நகைகள் திருட்டுப் போயுள்ளன.

நேற்று அதிகாலை 3 மணியளவில் சமையல் வேலைகளுக்காக எழுந்த வீட்டார், சார்ஜ் போடுவதற்கு கையடக்கத் தொலைபேசியை தேடியபோது கைப்பேசி இருக்கவில்லை. அத்தோடு, வீட்டிலுள்ள அலுமாரியும் கதவும் றந்த நிலையில் காணப்பட்டுள்ளன.

பின்னர், நகைகள் வைக்கப்பட்டுள்ள இடத்தைப் பார்த்தபோது அங்கிருந்த நகைகளும் திருட்டுப் போயுள்ளமை கண்டு வீட்டார் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த குடும்பத்தினருடன் தொடர்புடையவர் அல்லது இரகசியமாக நுழைந்த யாரோ ஒருவர் இந்தத் திருட்டில் ஈடுபட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதன் அடிப்படையில் யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் கோப்பாய் பொலிஸார் தொடர் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (05)

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இருவர் தந்தை, மகன் மீது கோரத் தாக்குதல்!

## அடுலுகமவில் சம்பவம்

அடுலுகம, மாராவ பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இருவர் அங்கிருந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனப் பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் தந்தை படுகாயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த தந்தையும் மகனும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய சம்பவம் காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னரே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (05)

## பாடசாலைகளுக்கான

# 3ஆம் தவணை முதல் கட்டம் டிசெம்பர் 23 நிறைவடைகிறது



தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளின் 2023 ஆம் ஆண்டு மூன்றாம் தவணைக்கான முதலாம் கட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுகுறித்து கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதற்கமைய, டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்டப் பாடசாலை நடவடிக்கைகள் அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இதனிடையே, முஸ்லிம் பாடசாலைகளுக்கு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டவுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 2023 கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன. ஜனவரி 4 முதல் ஜனவரி மாதம் 31 வரை க.பொ.த உயர்தர பரீட்சை நடைபெறவுள்ளது என்றுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.11.2023இல் வெளியிடப்பெற்றது.